வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி
கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
ந.க.எண். 1459/மாஒ2/ஒபக/2022, நாள். .11.2022

பொருள் : வேலூர் மாவட்டம் – ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – கல்வி சாரா செயல்பாடுகள் – 2022–2023 ஆம் கல்வியாண்டில் அரசு பள்ளிகளில் ''கலைத் திருவிழா போட்டிகள்'' நடத்துதல் – சார்பாக.

பார்வை : 1. 2022–2023 ஆம் ஆண்டில் சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.
2. சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3195/ஆ7/கலை/ஒபக/2022, நாள். 21.09.2022.
3. வேலூர் மாவட்டம், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.1230/மாஒ2/ஒபக/2022, நாள்.17.10.2022.
4. சென்னை–6, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.3195/ஆ7/கலை/ஒபக/2022, நாள். 11.11.2022.

*********

பார்வை 1–ல் காணும் 2022–2023 ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்கண்ட அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

''மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் விதமாக அரசுப் பள்ளிகளில் பயிலும் இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத் திருவிழா நடத்தப்படும்''

தமிழகத்தில் உள்ள பல்வேறு கலை வடிவங்களை அறிமுகப்படுத்தி, மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் விதமாகவும், பள்ளிக் கல்வி செயல்பாடுகளின் ஒரு பகுதியாக கலை பண்பாட்டு கொண்டாட்டங்களை ஒருங்கிணைப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலம் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு கலை சார்ந்த பயிற்சிகளும், 6 முதல் 12 வகுப்புகளில் பயிலும் மாணவர்களுக்கு கலைத் திருவிழா போட்டிகளும் நடத்தப்படவுள்ளது.

**பள்ளிக் கல்வியில் கலை மற்றும் பண்பாட்டை ஒருங்கிணைத்தல்**

**"கலை என்பது குழந்தைகள் தங்கள் கருத்துக்களை, தாங்கள் நம்புவதற்கும், சாத்தியமானவற்றை ஆராயவும் கற்றுக் கொள்வதற்கும் ஒரு இடம்."**

**கலைச் செயல்பாடுகள், குழந்தைகளின் பிற கற்றல் செயல்முறைகளில் மிகவும் சுறுசுறுப்புடனும் ஆழமாகவும் ஈடுபட உதவுகிறது.**

**இவை குழந்தைகளின் முடிவெடுக்கும் திறனை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவர்களை தன்னம்பிக்கை கொண்டவர்களாக மாற்றுகிறது. மேலும் அவர்களுக்கு பிடித்த கலையை கற்றுக் கொள்வதால், அவர்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய ஆழமான புரிதலை ஏற்படுத்துகிறது. இதனை**

முன்னிருத்தி இவ்வாண்டு 6 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்கள் பங்கேற்கு கலைத் திருவிழா நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இக்கலைத் திருவிழா பல்வேறு கலை வடிவங்களுக்கு ஊக்கமளிப்பதற்கும், உள்ளூர் கலைஞர்கள் பங்கேற்பதற்கும் வாய்ப்புகளை உருவாக்கும். தமிழகத்தின் பாரம்பரிய கலை வடிவங்கள் மற்றும் பண்பாட்டைக் குறித்து மாணவர்கள் அறிந்து கொள்ள இச்செயல்பாடுகள் வழிவகுக்கும்.

<u>கலைத் திருவிழா</u>

பிரிவு 1 : 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை

பிரிவு 2 : 9 மற்றும் 10 ஆம் வகுப்பு

பிரிவு 3 : 11 மற்றும் 12 ஆம் வகுப்பு

பள்ளி அளவில் நடைபெறும் போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களை வட்டார அளவிலும், வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவிலும் மாவட்ட அளவில் வெற்றி பெறும் மாணவர்கள் மாநில அளவில் நடைபெறும் போட்டிகளிலும் பங்கேற்கச் செய்ய வேண்டும். மாநில அளவிலான கலைத் திருவிழா இறுதி போட்டிகள் ஜனவரி மாதத்தில் நடத்தப்பட்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் மற்றும் <u>கலையரசன்</u>, <u>கலையரசி</u> என்ற விருதுகளும், மாநில அளவில் தமிழக அரசின் சார்பில் வழங்கப்பட்டு மாணவர்களின் கலைத்திறன்கள் ஊக்கப்படுத்தப்படும்.

மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களில் தரவரிசையில் முதன்மை பெறும் 20 மாணவர்கள் வெளிநாடுகளுக்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.

<u>கீழ்காணும் அட்டவணையின்படி கலைத்திருவிழா போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.</u>

| | |
|---|---|
| பள்ளி அளவில் | 23.11.2022 முதல் 28.11.2022 க்குள் |
| வட்டார அளவில் | 29.11.2022 முதல் 05.12.2022 க்குள் |
| மாவட்ட அளவில் | 06.12.2022 முதல் 10.12.2022 க்குள் |
| மாநில அளவில் | 03.01.2023 முதல் 09.01.2023 க்குள் |

அனைத்து வகை அரசுப்பள்ளிகளிலும் கலைத்திருவிழா போட்டிகளில் பெருமளவு மாணவர்களின் பங்கேற்பினை உறுதி செய்ய வேண்டுமாய் தலைமையாசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஆய்வு அலுவலர்கள் அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

பள்ளியின் EMIS வழியாக ஒவ்வொரு போட்டியில் பங்கு பெறும் மாணவரின் விவரங்களை போட்டி வாரியாக பள்ளி அளவில் பதிவு செய்ய வேண்டும். போட்டிகள் முடிந்த பின் தேர்வான/ வெற்றி பெற்ற மாணவ, மாணவியரின் பெயரை பதிவு செய்ய வேண்டும். இந்த மாணவரின் பெயர் அடுத்த நிலைப் போட்டிக்கு வட்டார அளவில் பார்வையிட இயலும். வட்டார அளவிலும் தேர்வான/ வெற்றி பெற்ற மாணவ மாணவியரின் பெயரை இவ்வாறே அந்த நிலையில் உள்ள பொறுப்பு அலுவலர் EMIS - ல் உள்ளீடு செய்யப்பட வேண்டும் . இவ்வாறே மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு போட்டி வாரியாக தேர்வான மாணவ / மாணவியரின் பெயரும் முதன்மை கல்வி அலுவலரின் EMIS Login வழியாக உள்ளீடு செய்யப்பட வேண்டும். இந்த மாணவரின் பெயர்களே மாநில அளவிலான போட்டிக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதற்கான செயல்முறை விளக்க காணொளி TNSED youtube சேனலில் விரைவில் வெளியிடப்படும். அதனை பின்பற்றி அனைத்து நிலைகளிலும் தரவுகள் உள்ளீடு செய்யப்பட வேண்டும்

வட்டார அளவில் / பள்ளி அளவில்

வட்டார அளவில் 5 பள்ளிகளில் போட்டிகளை பிரித்து நடத்தப்பட வேண்டும்.

வட்டார அளவிலான போட்டிகள் நடத்த வட்டாரக் கல்வி அலுவலர் தலைமையிலான குழு நியமனம் செய்து போட்டிகளை எவ்வித புகாருக்கும் இடமின்றி நடத்தி முடிக்கப்பட வேண்டும். வட்டார அளவிலான குழுவில் மேற்பார்வையாளர் (பொ) மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் இடம் பெற வேண்டும். General Performance போட்டிகள் துவங்கும் முன் தர வேண்டும்.

பள்ளி அளவில் நடக்கும் போட்டிகளில் முதலிடம் பிடித்த மாணவர்களை மட்டுமே வட்டார அளவில் நடக்கும் போட்டிகளில் பங்கேற்கச் செய்ய வேண்டும். வட்டார அளவில் முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெற்ற மாணவர்களை மாவட்ட அளவில் நடக்கும் போட்டிகளுக்கு அனுப்ப வேண்டும்.

பள்ளி அளவில் அனைத்து மாணவர்களும் போட்டிகளில் பங்கேற்பதை தலைமையாசிரியர் உறுதி செய்ய வேண்டும். ஒரு மாணவர் கூட விடுபடாமல் அனைவரையும் ஏதேனும் ஒரு போட்டியில் கட்டாயம் பங்கேற்கச் செய்ய வேண்டும். ஒரு மாணவரை 5 போட்டிகளில் (3 தனிநபர் போட்டிகள், 2 குழு போட்டிகள்) பங்கேற்க அனுமதிக்கலாம்.

மேற்காணும் கலைத்திருவிழா போட்டிகள் எவ்வித புகாருக்கும் இடமளிக்காவண்ணம் மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களின் வழிகாட்டுதல் மற்றும் நெறிமுறைகளின் படி சிறப்பாக நடத்திடுமாறு சார்ந்த அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
வேலூர் மாவட்டம்.

19/11/2022

இணைப்பு –
வழிகாட்டு நெறிமுறைகள்

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர் (இடை நிலை), வேலூர்.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி), வேலூர்.
3. அனைத்து அரசு நடுநிலை/உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம். (உரிய வழியாக)
4. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம்.
5. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம்.

நகல் – மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை–6 அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் – முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் – அவர்களுக்கு கனிவுடன் அனுப்பலாகிறது.